1989 மார்ச் 30]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, நீங்கள் சில பகுதிகளை இங்கே சொல்கிறபோது, அவை எல்லாம் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சுட்டிக்காட்டுகிறீர்கள். அதற்குப் பின்னால் இவை இவை நீக்கப்படும் என்று தங்களுடைய அறையில் வைத்து சொல்லியிருக்கிறீர்கள். அதனால்தான் நான் சொன்னேன். இது தவறான முன் உதாரணமாக அமையும். அப்படி இங்கு எது எல்லாம் எதிர்க்கட்சி சார்பில் பேசப்படுகிறதோ அவை எல்லாம் தாங்கள் அறையிலே வைத்து, அவை முடிந்ததற்கு பின்னால் நீக்கப்படுமானால் நாங்களும் அது போலே இங்கே அவையிலே என்னென்னவெல்லாம் பேசினோம் என்பதை எல்லாம் சொல்கின்ற நிலை ஏற்படும் என்பதைத் தான் இங்கே நான் சுட்டிக்காட்டினேன். அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லாமல் எல்லாவற்றையும், இங்கேயே, அவையிலேயே அறிவித்தால் பிரச்சினையே வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நான் இது பற்றி தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். நேற்று திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொன்ன பிறகு அதை மறுப்பது சரியல்ல என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பே தவறு என்று சொல்வது மரபல்ல என்று சொன்னேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் கோடிட்டு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் கோப்புகளை காண்பித்தேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) தக்கர் கமிஷன் அறிக்கையின் பிரதியைப் பேரவையில் வைப்பது குறித்து

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்லும்போது ஒரு கமிஷன் அறிக்கை பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரியவேண்டியது, சாதாரணமாக பாராளுமன்ற அவையில், பாராளுமன்றத்தில், பதில் சொல்லக்கூடிய ஏடுகளை வைப்பார்கள். மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட ஏடுகளை வைப்பார்கள். பாராளுமன்ற அதிகாரத்திற்கு உட்பட்ட ஏடுகளை அங்கே வைப்பார்கள். ஆனால், தக்கர் கமிஷன் அறிக்கையில் பொறுத்த வரையில், ஓர் இந்திய நாட்டின் பிரதமர் வைத்திருக்கிறார். ஆகவே, அதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். She is not the Prime Minister for Parliament alone. She is the Prime Minister of India. So, I want a clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அனைத்து இந்திய, முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும்கூட, ஒரு மரபு கருதி நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களே 39 பேர் அந்தப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்? அவற்றை வாதிப்பதற்காகத்தான். அவர்கள் எல்லாம் அங்கே சென்றிருக்கிறார்கள். எனவே, இந்த அவையில் அதை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

திரு பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்காக கேட்கவில்லை. எங்களுடைய கவனத்திற்குக்காகவாவது ஒரு காப்பியை இங்கே லாபியில் வைக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே வெளியிடப்பட்ட அந்தப் பிரதி நமக்குக் கிடைக்குமானால், அல்லது கிடைக்கா விட்டால் அதைப் பாராளுமன்றத்திற்கு எழுதிப் பெற்று நூல் நிலையத்திலோ அல்லது உறுப்பினர்களின் பார்வைக்கோ வைப்பதிலே எந்தவித மறுப்பும் இல்லை. இப்பொழுது இந்தத் தக்கர் கமிஷன் அறிக்கை குறித்து பல்வேறு மாநில சட்டமன்றங்களிலேயே பெரிய அமளிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இங்கே ஏற்பட்ட அமளியே போதும், புது அமளி வேண்டாம் என்பதற்காகத்தான் தக்கர் கமிஷன் அறிக்கை பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம் என்ற கருத்தை நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் இப்படிப் புன்முறுவலோடு தொடர்வது குறித்து மகிழ்ச்சி.

(முற்பகல் 10—00)

திரு. எஸ். திருநாவுக்கரசு : புன்முறுவலோடுதான் ஆரம்பிக்கிறேன். கடைசி வரை பேசவிட்டால் நானும் மகிழ்ச்சியடைவேன். சட்டமன்ற விதிகளின்படி, சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் குறித்துகூட உரிமைப் பிரச்சினை எழுமானால், அவற்றைச் சட்டமன்றத்திலே எழுப்பலாம் என்று பேரவை விதி 221 கூறுகிறது. சட்டமன்றப் பேரவை விதி 221-ன்கீழே, பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் வரும் உரிமைப் பிரச்சினை ஒன்று, உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறுமென்றும், பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் பேரவைத்தலைவர் எத்தகைய முன்னறிவிப்பு எதுவும் இல்லாமலேகூட அவர் பொருத்தமெனக் கருதுவதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. எனவே, பேரவையிலே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பேரவையில் பேசக்கூடாது என்றல்ல, சட்டமன்றத்திற்கு